கலைமகள் அருட் செல்வம்

(Dictionary of Epithets and Names of Mahasaraswati)

மு. சதாசிவம், எம் ஏ.,

தமிழ்ச்செல்வம் தொகுதி 3:

கலைமகள் அருட் செல்வம்

(DICTIONARY OF EPITHETS AND NAMES OF (MAHASARASWATI)

அருந்தமிழறிஞர் உயர்திரு சா. கணேசன் எம்.எல்.ஏ.,

★

அவர்களுக்கு அன்பளிப்பு

மு. சதாசிவம்
3.10.66.

ஆசிரியர் :

மு. சதாசிவம், எம். ஏ.,

ஆசியுரை :

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்

அணிந்துரை :

திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்கள்

★

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

முருகேச முதலியார் சதாசிவம் (1936)

முதற்பதிப்பு ஜூலை 1966
உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 1-00

Kalaimakal Arutchelvam

குமரன் அச்சகம், சென்னை-1.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு
ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்
அருள்கூர்ந்து அளித்த ஆசியுரை

ஸ்ரீ பழனியாண்டவர் கலைக் கல்லூரியில் தமிழாசிரியராய் இருக்கும் ஸ்ரீ மு. சதாசிவம் எம் ஏ., பல ஆண்டுகளாகத் தமிழில் உள்ள தெய்வசம்பந்தமான பிரபந்தங்களையும், புராணங்களையும், இலக்கியங்களையும் படித்து, அவற்றிலிருந்து தெய்வங்களின் பெயர்கள், திருக்கல்யாண குணங்கள், அருட் செயல்கள் முதலியவற்றைத் தொகுத்து அகர வரிசைப் படுத்திக் கொடுத்திருப்பது மிகவும் போற்றுதற்குரியது. இப்போது வெளியிடப்படும் விநாயகர் அருட்செல்வம், திருமகள் அருட்செல்வம், கலைமகள் அருட்செல்வம் ஆகிய இந்த நூல்கள் ஆஸ்திகர்கள் தினந்தோறும் படித்து அந்தந்தத் தெய்வங்களைத் தியானிப்பதற்கு அருந்துணையாயிருக்கும். முருகன், விஷ்ணு, சிவபெருமான், உமாதேவி ஆகிய தெய்வங்களைக் குறிக்கும் தொடர்களின் அகராதிகளையும் ஸ்ரீ மு. சதாசிவம் தொகுத்திருப்பது வரவேற்கத் தக்கது. பெரும்பாலும் ஒவ்வொரு தொடரின் இறுதியிலும் பிரமாண நூல்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருப்பதால் அந்தந்தப் புராணங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றைப் பக்தர்கள் படிப்பதற்கு இந்நூல்கள் தூண்டுகோலாய் இருக்கும்.

மனிதர்களுக்கு அருள்செய்யும் தெய்வங்களின் பெருமைகளையெல்லாம் நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு உதவும் இந்நூல்களையெல்லாம் மிகவும் சிரமப்பட்டுத் தொகுத்துத் தந்த ஸ்ரீ மு. சதாசிவம், ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ர மௌளீச்வர க்ருபையால் மேன்மேலும் மேன்மையடைவாராக.

முகாம்: போளூர் நாராயணஸ்மிருதி:

26-5-66

அணிந்துரை

மனித வாழ்வு வளம்பெற எல்லாவற்றிற்கும் மேலாக இறையருள் வேண்டும். அதன் பிறகு பொருள் வேண்டும், அறிவு வேண்டும். அருளையும் பொருளையும் அறிவையும் தெய்வமாக எண்ணிப் போற்றிப் புகழ்கின்ற நாடு, வணங்கி வழிபடுகின்ற நாடு நம் பாரதநாடு. நல்லமனம் உண்டாக மலைமகளையும் நல்ல பொருள்பெற அலைமகளையும் நல்ல வாக்குண்டாகக் கலைமகளையும் தெய்வமாக வைத்துப் போற்றிக் கொண்டாடுகிறோம். அருள் பொருள் அறிவு ஆகிய மூன்றிற்கும் தெய்வங்களாக மூன்று பெண் தெய்வங்களை வைத்து வணங்கிப் பெண்ணினத்திற்கே தனிச் சிறப்புக் கொடுத்து மகிழ்ந்த பெரியோர்கள் வாழ்ந்த நாடு நம் நாடு.

இத்தகைய நாட்டிலே தோன்றிய மகான் வள்ளுவப்பெருந்தகை செல்வம் என்று சொன்னால்—கேடற்ற செல்வம் என்று சொன்னால் அது கல்விச் செல்வம்தான் என்பதை மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்— "கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்லமற்றையவை." கற்கக் கற்கத்தான் அழிவு காக்கும் அறிவு ஊறுகிறது, தோண்டத் தோண்டக் கிணற்றிலே நீர் ஊறுவதைப் போல. அறிவு எனும் கருவி இல்லாது போனால்—வருமுன் காக்கின்ற அறிவு அற்றுப்போகுமேயானால் எரிகின்ற தீயின்முன் இருக்கின்ற வைக்கோல் போரைப் போலத்தான் வாழ்க்கை ஆகிவிடும். அதனால்தான் வள்ளுவர் "அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்" என்றார். இத்தகைய அறிவைப்பெறச் சிறந்த கல்வியறிவு வேண்டும்.

கலை கணிதம் மருத்துவம் அறிவியல் பொறியியல் முதலிய கல்வித்துறைகள் இக் காலத்தில் எண்ணிலவாய் விரிந்து கிடக்கின்றன. முற்காலத்தில் அறுபத்து நான்கு கலைகள்

என்று வரையறுத்திருந்தனர். இன்று எண்ணற்ற கலைகள் காணப்படுகின்றன. காலப்போக்கில் இன்னும் எத்தனை எத்தனையோ கல்வி, கலைத்துறைகள் ஏற்படக்கூடும்.

எல்லா வகையான கல்விக்கும் தெய்வமாக வீற்றிருப்பவள் கலை மங்கையான சரஸ்வதியாவாள். ஆனால் அக்கலைமடந்தையே 'கற்றது கைம்மண்ணளவு' கல்லாதது உலகளவு, என்று கூறுவதாகக் கலைமகளின் அம்சமாகப் போற்றப்படும் ஔவைப் பிராட்டியார் பாடியுள்ளார்கள்.

'கல்வி கரையில, கற்பவர் நாள் சில'! அதனால் சாந்துணையும் கற்க வேண்டுவது இன்றியமையாதது. கற்ற கல்வி காலத்துக்கும் உதவும். "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து."

கலைமகளின் கருணை நோக்கினால் எத்தனையோ பல கவிஞர் பெருமக்கள் கல்வியிற் பெரியவர்களாக மாறினர் என்று பெரியோர்கள் சொல்ல அறிகிறோம். கலைமகளைத் தவறாது நாளும் வணங்கி வழிபடுவோர்க்குக் கல்வியறிவு பெருகும் என்பது நம் முன்னோர்கள் நம்பிக்கை.

கலைமகளின் அருளும் இடைவிடாத் தன் முயற்சியும் இருந்தால் எவரும் செல்வத்துட் செல்வமாகிய கல்விச் செல்வத்தை அடையலாம். பொருட்செல்வத்தைக் காட்டிலும் கல்விச் செல்வமே என்றும் நிலையானது—அழியாதது. கலைமகளின் அருளைப் பெறுவதற்குக் கலைமகளின்மீது பாடப்பெற்ற பாடல்களை நாளும் ஓதி வழிபடுதல் ஒரு வழியாகும். தினமும் கலைமகளின் திருநாமங்களைத் தியானித்து அர்ச்சனை செய்து வழிபடுவது மற்றொரு வழியாகும். இந்த இரண்டாவது வழிக்கு இந்த நூல் பெரிதும் துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலில் கலைமகளின் திருப்பெயர்கள் ஏறக்குறைய எண்ணூறு அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ நூற்று என்பத்தி இரண்டு நூல்களினின்று அவை தொகுக்கப் பெற்றுள்ளன. கலைமகளை வழிபடுவோர்க்கும்—கலைமகளைக் குறிக்கும் சொற்செல்வத்தைப்பெற விரும்புபவர்க்கும்—குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி மகிழ நல்ல பெயர்களைத் தேடுபவர்களுக்கும் இந்நூல் ஏற்ற துணையாய் அமைந்துள்ளது.

இந்த நூலை அரும்பாடுபட்டு உருவாக்கியுள்ள திரு. மு. சதாசிவம் அவர்களை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை. திரு. சதாசிவம் அவர்கள் இது போன்ற இன்னும் பல நூல்களை உருவாக்கவும் கல்விச் செல்வத்தோடு பொருட் செல்வத்தையும் அருட் செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் நீடித்த புகழையும்பெறவும் அருள்புரிய வேண்டும் கலைத்தேவி என்பதுதான் இப்போது என் வேண்டுகோள் 'அவள்' திருமுன்னிலையில்!

வாழ்க திரு சதாசிவம் அவர்கள்! வளர்க அவர்தம் தெய்வீகத் திருப்பணி!

'முருகனடி',
தேனும்பேட்டை
சென்னை.
13—6—66

அன்புள்ள
சௌந்தரா கைலாசம்

முன்னுரை

கலைமகள் எல்லாவகையான கல்வித்துறைகளுக்கு மட்டுமின்றி எல்லாவகையான கைத்தொழில்களுக்கும் தலைமைத் தெய்வமாவாள். அதனால்தான் கலைமகள் பூசை நாளன்று எல்லாத் தொழிலாளர்களும் தங்கள் கருவிகளைத் தூய்மை செய்து பொட்டிட்டு வணங்கிப் போற்றுகின்றார்கள். கலைமகள் பூசையை 'ஆயுதபூஜை' என்றே தமிழகத்தின் பலவிடங்களிலும் வழங்குகின்றார்கள். எனவே எந்தத் தொழிலும் முழுமையுற வேண்டுமாயின், எத்தொழிலையும் திறம்பட வெற்றியுறச்செய்து முடிக்க வேண்டுமாயின் கலைத்தேவியைக் கைதொழுவது இன்றியமையாதது.

உலகங்கள் எல்லாவற்றையும் படைத்துக்காக்கும் தேவியாகிய திருவன்னையாரின் பல அம்சங்களுள் மகேசுவரி, மகாகாளி, மகாலட்சுமி, மகாசரசுவதி ஆகிய நான்கு வடிவங்கள் மிகவும் முக்கியமானவை. இந்த நான்கு சக்திகள் மூலந்தான் உலகில் எவ்விதத் தொழிலும் நடைபெறுகிறது. பெரும்பாலான மனிதர்கள் உலகச் சக்திகளின்-இயற்கைச் சக்திகளின் கைப்பொம்மையாகவே உலகில் காரியங்களைச் செய்துவருகின்றனர். ''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே?'' ஆனால் தெய்வத் திருவருள்பெற்ற பெரியோர்கள், மகான்கள் தெய்வச் சக்திகளைத் துணையாகப் பெற்றுச் செய்தற்கரிய அருஞ்செயல்களையும், அற்புதங்களையும் செய்து வந்திருக்கின்றனர்; செய்து வருகின்றனர். விஞ்ஞானிகள் போற்றும் இயற்கைச் சக்திகளினும் பன்மடங்கு வலிமைவாய்ந்த தெய்வீகச் சக்திகளை நாம பெறுவதற்குத் தேவியின் திருவருள் கட்டாயம் வேண்டியதாயுள்ளது.

முற்பிறவிகளில் செய்த புண்ணியத்தால் அல்லது அறச்செயல்களால் சிலர் அறிவிற் சிறந்தவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும், மேதைகளாகவும் விளங்கு

கின்றனர். அவர்களில் சிலர் உண்மையறியாது தெய்வச் சக்தியை மறுப்பதோடு தங்கள் சொந்த முயற்சியாலேயே தாங்கள் ஆற்றல்மிக்கவர்களாய் விளங்குவதாகப் பேசவும் தலைப்படுகின்றனர். சொந்த முயற்சியை இங்குக் குறைத்துக் கூறுவதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. 'தெய்வத்தான் ஆகாது எனினும், முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்பது பொய்யாமொழி. ஆனால் கருவிலே திருவுடையார் செய்யும் முயற்சிக்கு அளவிலாப் பெரும்பயனும், அஃதிலார் செய்யும் முயற்சிக்கு மெய்வருத்தக் கூலியுமே கிடைக்கும் கருவில் திருவுடையாரும் சொந்த முயற்சி செய்யாவிடில் அவர்களது ஆற்றல் வெளிப்பட்டுத்தோன்ற வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே எல்லாருக்கும் சொந்தமுயற்சி இன்றியமையாதது என்பதும், அருட்செல்வர்க்கே அம்முயற்சியின் பயன் மிகுதியாக உள்ளது என்பதும் அறியத்தக்கன.

கல்வியிற் பெரியவராகிய கம்பர் கலைமகளின் அருளை நிறையப் பெற்றவரே. எனினும் பெற்ற அருளைப் பேணி வளர்த்துச் சொந்த முயற்சியால் தமிழில் தமக்குக் கிடைத்த நூல்களையெல்லாம் பழுதறக் கற்று வடமொழிக் கல்வியையும் நிரம்பப் பெற்றுக் கரையிலாத பெரும்புலமையினை எய்தினர். கம்பரைப்போலவே காளியின் அருள்பெற்ற காளிதாசரும் வடமொழியில் அவருக்கு முன்பு தோன்றிய வேதங்களையும் புராணங்களையும் சொந்த முயற்சியால் கற்று இயற்கைப் புலமையுடன் கல்விப் பெரும்புலமையும் எய்தி உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராகத் திகழ்கின்றார்.

வாக்கிறைவியின் அருள் பெற்றோர் பாடும் அருட்பாடல்களுக்கும், காரிகை கற்றுக் கவிபாடும் பண்டிதரின் பாடல்களுக்கும் வேறுபாடு யாரே அறியாதார் !

கம்பர், காளிதாசர், ஞானசம்பந்தர், குமரகுருபர சுவாமிகள் போன்ற சிலருக்குத் தேவி தானே வந்து அருள் புரிந்திருக்கிறாள். மற்றவர்கள் தேவியின் அருளை இடைவிடாது

தியானித்து வேண்டிப் பெறக் கடப்பாடுடையவரே. தியானமும் பிரார்த்தனையும் இல்லாவிடினும் அருளைப்பெறும் தகுதிகளை யுடையவர்களுக்கு அவர்களையறியாமலே தேவியின் அருள் தானே கிடைக்கும். ஏனெனில் தேவியின் அருள் எங்கும் பரந்து நிற்கிறது; எவர்க்கும் கிடைக்கக்கூடியது. ஆனால் தியானமும் பிரார்த்தனையும் உடையோர்க்குத் தேவியின் அருள்விரைவில் கிடைக்கும் என்பது பெரியோர்களின் அனுபவ மாகும். தேவியின் அருளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர் களாகச் செய்வதே தியானம், பிரார்த்தனை ஆகியவற்றின் முக்கிய பயனாகும். இதற்கு இந்நூல் ஒரு நற்றுணையாக விளங்கும்.

விஞ்ஞானத் துறைகளுக்கும், தொழில் நுட்பத் துறைகளுக் கும், கலை நுட்பத் தூறைகளுக்கும் தலைவி கலைமங்கையே. புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்த விஞ்ஞானிகளுக்குக் கலைத்தேவி நுட்பமான, தெளிவான, மிகச்சிறந்த அறிவினை அளிக்கின் ருள். நியூடன், பாஸ்கல், எடிசன், ஐன்ஸ்டீன் போன்ற மாபெரும் விஞ்ஞானிகள் எல்லாரும் தங்கள் கண்டுபிடிப்புக் களுக்குக் கடவுளின் அருள் துணை நின்றதாகவே கூறியுள்ளார் கள். அகங்காரம் மிக்க மனித மனம்தான் கடவுளருளால் காரியம் நிறைவேறுவதை ஒப்புக்கொள்ள மறுக்கின்றது.

கலைமகளின் நல்லருளைப் பெற விரும்புவோர் எத்தொழி லைச் செய்தாலும் அதனைச் செம்மையாகத், திருந்தச் செய்ய வேண்டும். சிறுதவறு அல்லது பழுதுகூட ஏற்படாமல் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். அசாக்கிரதை அல்லது கவனமின்மையும், சோம்பலும் சிறிதும் இருக்கக்கூடாது. எந்த வேலையினையும் அவசர அவசரமாகச் செய்து அரைகுறையாக நிறுத்திவிடக்கூடாது. கருவிகளையும், கரணங்களையும் கவனமின்றிப் பயன்படுத்துவது, தவருகப் பயன்படுத்துவது, எடுத்த காரியத்தைப் பாதியிலேயே நிறுத்தி விடுவது இவை கலைமங்கைக்கு வெறுப்பை விளைப்பனவாகும். எத்தொழிலையும் நுட்பமாக, முழுமையாகச் செய்து முடிப்

பதையே கலைபணங்கு போற்றுகின்ருள். எதிலும் முழுமையான முழுமை ஏற்படவேண்டும் என்பதே அவளுடைய விருப்பம். அதற்காக எவ்வளவு காலம், உழைப்பு, முயற்சி முதலியன வேண்டியிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தக் கூடாது.

தேவியின் அம்சங்களுள் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவள் கலைத்தேவியே. மக்களின் எல்லாக் குறைபாடுகளையும் பொறுத்துக்கொண்டு புன்முறுவலுடன் அன்பு காட்டி ஆதரவு தந்து கொண்டிருப்பவள் அக்கலையணங்கே. நம் தேவைகளை நிறைவேற்றும் அன்னையாகவும், துன்பங்கள் ஏற்பட்டபோது அவற்றைத் துடைக்கும் நண்பனுகவும், தோல்வி, சலிப்பு சோர்வு முதலியவை ஏற்பட்டபோது அவற்றைத் தன் புன்னகையால் நீக்கும் அருட்செல்வியாகவும் அவள் விளங்குகின்ருள்.

சிவபிரானையும், திருமாலையும் மக்கள் போற்றி வழிபடுமளவுக்கு அவர்களின் சக்தியம்சங்களான மகேசுவரி அல்லது மகாகாளியையும், மகாலக்குமியையும் போற்றி வழிபட்டு வருகின்றனர். ஆனுல் திருமூர்த்திகளுள் ஒருவரான பிரம்மாவுக்குத் தனிக்கோயில்கள் இல்லை; பிரம்மாவை முழுமுதல் தெய்வமாகக் கொள்ளும் சமயமும் இல்லை. எனினும் பிரம்மாவின் சக்தியம்சமான நாமகளைச் சைவ வைணவ சமயங்களைச் சார்ந்தவரும் பிறரும் போற்றி வணங்குகின்றனர். மக்கள் யாவரும் உலகில் ஏதாவதொரு தொழிலைச் செய்து கொண்டிருக்க வேண்டும் என்பது இறைவனின் ஆணையாதலின், தொழில்களுக்கெல்லாம் தெய்வமான நாமகளை எல்லாச் சமயத்தவரும், புலவர்களும், கலைஞர்களும் போற்றி வழிபடுகின்றனர்.

மக்களுக்குக் கல்வியறிவைக் கொடுக்கும் கலைத்தெய்வத்தைப் போற்றுபவர்களுக்கு எல்லாச் சிறப்பும் எளிதில் கிடைக்கும். ஏனெனில் "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது வள்ளுவரின் திருவாக்கு.

திருமகள் செந்தாமரையில் உறைபவள்; கலைமகள் வெண்டாமரையில் விரும்பி உறைபவள். திருமகள் பொருட் செல்வத்துக்கும் அழகுக்கும் தலைமைத் தெய்வம்; கலைமகள் கேடில் விழுச்செல்வமாகிய கல்விச் செல்வத்திற்கும், கைத் தொழில்களுக்கும் தலைமைத் தெய்வம்.

‘திருமகள் அருட்செல்வத்’தைப் போலவே இந்த நூலையும் அர்ச்சனைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்நூல்களில் உள்ள ஒவ்வொரு தொடரின் தொடக்கத்திலும் ‘ஓம்’ என்ற மந்திரச்சொல்லையும், தொடரின் இறுதியில் போற்றி அல்லது நம என்ற தொடரையும் சேர்த்துக்கொண்டு அர்ச்சனை செய்ய லாம். வழிபாடு செய்யலாம்; இளங்கவிஞர்கள் இந்நூல்களில் உள்ள தொடர்களைப் படித்துப் புதுக் கவிதைகளை இயற்று வதற்கு ஊக்குணர்ச்சியை அடையலாம். தமிழில் ஆர்வமுள்ள எல்லோரும் இந்நூலை முதலிலிருந்து முடிவுவரை பன்முறை படித்து இந்நூலிலுள்ள தொடர்களை மனப்பாடம் செய்து கொள்வது நல்லது. சிறப்பாகப் பள்ளி மாணவர்கள் இந்நூல் களை மனப்பாடம் செய்யுமாறு ஆசிரியர்கள் வழிகாட்டுவார்க ளாயின் மாணவர்களுக்குத் தமிழறிவும், கல்விச் செல்வமும் பெருகும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் அளவில் சிறியதாயினும், இவ்வடிவில் உருவா வதற்குப் பல ஆண்டுகள் ஆய்விட்டன. வடமொழியில்கூட சரஸ்வதி தேவிக்கு ஆயிரந் திருநாமங்கள் (சகஸ்ர நாமங்கள்.) உடைய நூல் ஒன்றும் வெளிவந்ததாக எனக்குத்தெரியவில்லை. இந்நூலில் ஏறக்குறைய எண்ணூறு தொடர்கள் உள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் இன்னும் இருநூறு தொடர்கள் கிடைப்பதற்குக் கலைமகள் திருவருள் புரிவாள் என்று நம்பு கிறேன்.

தெய்வங்களின் திருநாமங்கள் மக்களின் நாவில் பயிலப் படவேண்டும்; அதனால் உலகியல் வாழ்க்கையில் பெருநலம் ஏற்படும் என்ற ஆர்வமும் உறுதியும் கொண்டிருக்கும்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகள் அவர்கள் இத்தகைய நூல்கள் எல்லாம் விரைவில் வெளிவர வேண்டும் என்று நல்லாசி கூறியருளினுர்கள். இதற்குமுன் வெளிவந்த 'திருமகள் அருட்செல்வம்' என்ற நூலைப் படித்துப்பார்த்த ஸ்ரீ புதுப்பெரியவர்கள் அவர்களும் இத்தகைய நூல்கள் வழிபாட்டிற்கு மிகப் பயன்படும் என்று கூறியருளி இப்படிப்பட்ட நூல்கள் இன்னும் வெளிவருவதற்கு முகமலர்ந்து நல்லாசி கூறியருளினுர்கள். 'ஸரஸ்வதி' என்ற திருநாமத்தைப் பெற்றிருக்கும் இவ்விரு பெரியவர்களும் நல்வாழ்த்துக் கூறியருளி இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியருளிய பெருங்கருணைத்திறத்தை என்றும் மறவேன். இவ்விரு பெரியவர்களுக்கும் என் பணிவார்ந்த வணக்கங்களும், வந்தனங்களும் உரியவாகும். ஸ்ரீ ஆச்சார்யாள் அவர்கள் சென்ற மாதம் இருமுறை என் கனவிலும் காட்சியளித்து நல்லாசி வழங்கிய கருணையை என்றும் மறவேன்.

கலைமகளின் திருவருள் கைவரப்பெற்றவர்களாயும், திருமகளைப் போல அழகு மிக்கவர்களாயும், மேடைகள் தோறும் செந்தமிழ்த்தேன் மொழிகளைக் கேட்பவர் செவிகளும் சிந்தையும் இன்புறுமாறு பேசிவருபவர்களாயும், தமிழ்நாட்டுப் பெண்ணினத்திற்குப் பெருமைதரும் பெண்கள்திலகமாயும் திகழ்ந்து வரும் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் அன்னைபோல் என்பால் அன்பு பூண்டு இந்நூலுக்கு அழகுமிக்க அணிந்துரை வழங்கியருளியமைக்காவும், தாயுள்ளத்துடன் பிறர் எவரும் இதைவிடச் சிறப்பாக வாழ்த்த முடியாது என்று சொல்லும்படி என்னை வாழ்த்தியருளியமைக்காவும் என் பெருநன்றியினையும், வணக்கத்தையும், பேரன்பினையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் உருவாவதற்கு உறுதுணையாய் இருந்துவந்த கலைமகளாம் திருவன்னையாரின் திருவடிகளை வழுத்துகிறேன்.

பழனி
31—7—66

மு. சதாசிவம்

சமர்ப்பணம்

எல்லோரும் எப்போதும் இன்புற்றிருக்க நல்வழி காட்டிவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகளின் திருவடிகளுக்கு இந்நூல்
அன்புக் காணிக்கையாக
சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்நூலில் எடுத்தாளப்பெற்ற (182) நூல்களும் அவற்றின் சுருக்கக் குறியீடுகளும்

அ-அருட்கவி சேதுராமன் (பாடிய தேதி)

அண் கருவூ - அண்ணாமலையார் கருவூலம்

அமுதா (ம்பிகை) பி(ள்ளைத்) த(மிழ்)

அரிகே (சரி) பு(ராணம்) பாயி(ரம்)

அரிச்சந் - அரிச்சந்திர விலாசம் - இரங்கப்பிள்ளைக் கவிராயர் இயற்றியது

அரிச் வி - அரிச்சந்திர விலாசம்

அலர்மேல் (மங்கை) பி(ள்ளைத்) த(மிழ்)

அழகியமாமுலை பி(ள்ளைத்) த(மிழ்)

ஆ அலங் - ஆறெழுத் தலங்காரம்

ஆடானைப் பு(ராணம்)

ஆண்டாள் பி(ள்ளைத்) த(மிழ்)

ஆப்பனூர்ப் பு(ராணம்)

இராமப் (பய்யன்) அம்(மானை)

உபதே(ச காண்டம்)

உமையம்பிகை பி(ள்ளைத்) த(மிழ்)

உரி நி - உரிச்சொல் நிகண்டு

உலகம்மை பி(ள்ளைத்) த(மிழ்)

கண்ணமங்(கை) மா(லை)

கதிரே க - கதிரேசர் கலம்பகம்

கந் கீ - கந்தபுராணக் கீர்த்தனை

கந்தசு(வாமி) பி(ள்ளைத்) த(மிழ்)

கந்த (நாதன்) நான்மணி மாலை

கந் பிதி - கந்தசாமிப் பிள்ளை பிரபந்தத் திரட்டு

கந் வெ மா - கந்தபுராண வெண்பா மாலை

கபாலீ(சர்) பதி(கம்)
கம் சந் மு – கம்பைச் சந்நிதி முறை
கம்பன் பி(ள்ளைத்) த(மிழ்)
கமலாம்பிகை பி(ள்ளைத்) த(மிழ்)
கமலாலய (நாயகி) பி(ள்ளைத்) த(மிழ்)
கயாதரம்
கலாவதி
கலைமக ளந்(தாதி)
கலைமகளிரட்டை (மணி மாலை)
கழுகுமலைப் பி(ள்ளைத்) த(மிழ்)
கன்னி (வனநகர்ப்) பு(ராணம்)
கனகராயன் பள்ளு
காசிகண்(டம்)
காஞ்சி காமாட்சி பி(ள்ளைத்) த(மிழ்)
காந்திமதி(யம்மை) பி(ள்ளைத்) த(மிழ்) - (மீ)னாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றியது
கிள்ளை (விடு) தூது
குமர(குருபரர் பிரபந்தங்கள்) : உ. வே. சாமிநாதையர் பதிப்பு
குமரகோட்(டக் கடவுள்) பி(ள்ளைத்) த(மிழ்)
குமாரசுவாமி பி(ள்ளைத்) த(மிழ்)
குற் குற - திருக் குற்றாலக் குறவஞ்சி
குற் சி மலை வெ - திருக்குற்றாலச் சிலேடை வெண்பா
கூடலந் (தாதி)
கூடலை(யாற்றூர்ப்) பு(ராணம்)
கைலா(ச) நி(கண்டு)
கொடியிடை(யம்மை) பி(ள்ளைத்) த(மிழ்)
கோ பெ பி த - கோவை பெரியநாயகி பிள்ளைத் தமிழ்

தேவகோட்டை மு(ருகன்) பி(ள்ளைத்) த(மிழ்)
தேவாங்க (புராணம்)
தேவி (மான்மியம்)
தேவியின் கீர்த்தனங்கள்
தோ பி தி - தோத்திரப் பிரபந்தத் திரட்டு
நகுலேச்சுவர தசகம்
நச்(சுப் பொய்கை) விலா(சம்)
நந்திக் (கலம்பகம்)
நவமணித் திரட்டு
நளா(யனி) வெண்பா
நாம (தீப) நி(கண்டு)
நாமக(ளிரட்டை மணிமாலை)
நாலு (மந்திரி) விலா(சம்)
நித்திய கலியாணி அந்(தாதி)
பக்த மான்மியம்: பொதுப்பாயி(ரம்)
பக்த லீலாமிர்தம்
பச்சைநாயகி(யம்மை) பி(ள்ளைத்) த(மிழ்)
பர்வத வர்த்தனி (நாயகி) பி(ள்ளைத்) த(மிழ்)
பரங்(கிரி) மா(லை)
பழனித்திரு (வாயிரம்)
பள்ளி (கொண்டான்) பிர (பந்தங்கள்)
பன்னிரு பாட்டியல்
பாரத சார வெ(ண்பா)
பாரதி(யார்) தோத்(திரப் பாடல்கள்)
பிங்கல நி(கண்டு)
பி(ள்ளைத் தமிழ்க்) கொத்(து)
பிரபு (லிங்க லீலை)
புத்(தூர்ப்) பு(ராணம்)

பு(துவைப்) பெருந்தேவி(த் தாயார் பதிகம்)
புல(வர்) பு(ராணம்)
பூவண (நாதர்) உ(லா)
பெருங்கருணை(யம்மை) பி(ள்ளைத்) த(மிழ்)
பொதி(கை) நி(கண்டு)
போரூர் சந் (நிதி முறை)
மகா(பரத) சூடா(மணி)
மகாபாரத விலா(சம்)
மங்களா(ம்பிகை) பி(ள்ளைத் த(மிழ்)
மங்களே(சுவரியம்மை) பி(ள்ளைத்) த(மிழ்)
ம சுப் து - மயிலம் சுப்பிரமணியர் துதியமுது
மணி அக(ராதி)
மதுரை மீனாட்சி(யம்மன்) பதி(கம்)
மயில்விடு தூ(து)
மயிலைப் பி(ள்ளைத்) த(மிழ்)
மயூரகிரிநாதர் பி(ள்ளைத்) த(மிழ்)
மயூரா (சல) பு(ராணம்)
மரகதவல்லி (யம்மன்) பி(ள்ளைத்) த(மிழ்)
மலரும் (மாலையும்)
மாக (ஸ்நான புராண அம்மானை)
மாக பு(ராணம்)
மாணிக்க (வாசகர்) விலா(சம்)
மாம்பழ(க்கவிச்சிங்க நாவலர்) பிர(பந்தத் திரட்டு)
மார்க்(கண்டேயர்) சரித்(திரக்) கும்(மி)
மார்க்(கண்டேயர்) நாட(கம்)
மீனாட்சி(சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தங்கள்)
மு அ மா-முருகன் அட்சரமாலை
மு(ருகன்) திருமேனிச் சிவப்பு

முரு(கானந்த) லகரி
ரமண (தேவ) மா(லை)
ராமா(யண) வெ(ண்பா)
ராஜ ராஜேசுவரி பதி(கம்)
ரூபாவதி
வடிவுடை(யம்மன்) பி(ள்ளைத்) த(மிழ்)
வடிவேலன் பி(ள்ளைத்) த(மிழ்)
வள்ளி வேட்கை
வளை(சைக் கலியாணி) பி(ள்ளைத்) த(மிழ்)
விட்டி(லாபுரத் தல) பு(ராணம்)
வித்துவான் குறம்
வி(நாயகர்) பு(ராணம்)
வினோ(தரஞ்சித) கீ(ர்த்தனை)
விஸ்வ பு-விஸ்வபிரம புராணம்
வீரபா(ண்டியம்)
வெங்உலா - திருவெங்கையுலா
வெள்ளூர்ப் பு(ராணம்)
வேம்படி வி(நாயகர்) க(லம்பகம்)
வேலலங் (காரம்)
வைண (விசந்நிதி முறை)
க்ஷேத்(திரக் கோவைப்) பி(ள்ளைத்) த(மிழ்)

பொது

கட - கடவுள் வாழ்த்து
சாத்து - சாத்துகவிகள்
சி பாயி - சிறப்புப்பாயிரம்
ப = பக்கம்
பாயி - பாயிரம்

கலைமகள் அருட் செல்வம்

அகிலாண்டமும் பெற்ற தாய் (சரசு அந் 8)

அங்கையில் ஏடும் அணிவடமும் உடையாள் (சரசு அந் 24)

அட்சர தேவி (தி 1204, 1126)

அதிமதுர குணநய வெள்ளன்னப் பேடு (தேவாங்க 1-7)

அபிராமி (வேங்கட பு 5-3)

அம்புசாசனி (தனிப்-சு 162)

அம்புயத்தாய் (சகல கலா 9)

அம்புயன் தேவி (நாமகளிரட்டை 12)

அம்புயன் மடந்தை (உப 1304)

அம்போருகி (கந் பிதி 20-1)

அயன் தாலுவில் இருப்போள் (கைலா நி)

அயன்பாரி (நாம நி 56)

அயன் மகிழ் அணி (மு அ மா துதி)

அயன்மனைக் கிழத்தி (காஞ்சிப் 6-8)

அயன்மனைவி (சூடா நி)

அயன்மாது (தி 920)

அயன்றன் மனைவி (காஞ்சிப் 10-30)

அயனது தாலம் மேவும் அம்பிகாமணி (அரிச் வி 5)

அயனுடைய நாவுதனில் அமர்ந்திருக்கும் வல்லவி (வித்துவான் குறம்)

அரச அன்னப் பேடு (ஆப்பனூர்ப் பு 1-11)

அருமறை முகத்துப் பாட்டி (தி 446)

அல்லியங் கமலத்து அணங்கு (நாமகள் 18-1)

அலகிலா ஞானஅருட்கடல் (நாமகளிரட்டை 7)

அலர் வெண் கமலப் பெண்

அலரவன்றன் தேவி (சிவ சந் 2)

அலைகடல் சூழ் உலகமெலாம் ஒரு பிரம நாவிலி ருந்து அளித்தே யாரும் நலமையுற மறைமுதல் எக்கலையுஞ் சொல்லியருள் ஞானமூர்த்தி (மாணிக்க விலா 3)

அவநாசி (மணி அக)

அவனி பருகிய மால்திருவுந்தியில் அமரும் ஒரு பிரமாவெனும் அந்தணன் அரிய சதுமறை நாவிலிருந்தவள் (செந் பி த 5)

அழகெறிக்குந் திருக்கோல நாயகி (சரசு அந் 5)

அளவில் பலகலை ஓதியுணர்ந்தவள் (செந் பி த 5)

அறிவாகிய தெய்வம் (பாரதி தோத் 4-3)

அறிவாட்டி (கயாதரம் 13)

அறிவுதருங் கலைகள் எலாம் தனதுருவாய் அமைந் திருந்தும் அறி பொருளை நாடுவள் போல் ஏடமையும் அணிகரத்தள் (கோ பெ பி த 14)

அறுபத்து நாலாய் நின்ற சொற்போதக் கலைமகள் (சிவசைல பு 1-8)

அன்னந்தனைப் போலும் நிறவாணி (புல'பு 54-6)

ஆகம வேதம் நான்கும் அருங்கலை பலவும் இங்கே வாகையாய்த் தழைக்கத் தந்து மால் மரும களாய்வந்தே தாகமாய் உலகளித்த சதுர்முகன் நாவில் வாழும் மாகனவாணி (நாலு விலா 2)

ஆதிக் கலாமயில் (சரசு அந் 23)

ஆதித்தியை (மணி அக)

ஆதிநாயகி (ஞானு 3)

ஆய்கலைப் பாவை (சரசு அந் 8)

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் மேய உணர்விக்கும் அம்மை (சரசு அந்)

ஆர்கலைச் செல்வி (மு அ மா துதி)

ஆரணப்பாவை (சரசு அந் 8, 20)

ஆரணி (சரசு அந் 19)

ஆலிய கமண்டலத்தோன் தாலுவின் அமர்ந்திட்டு அன்பர் சாலிய கமலவேணித் தற்பரன் அருள் பெற்றுய்வான் கோலியாகம மெய்ந் நூல்கள் குறித்து உணர் அறிவு கூட்டும், வாலிய கமலத்து அன்னை (புத் பு 1-14)

இகபரம் இரண்டிலுஞ் சீர்சால், அறம்பொருள் இன்பமொடு வீடு நெறியே எய்துவிக்குங் கலை உணர்ச்சி முழுதுந்தனை இறைஞ்சும் அன்பர்க்கு நல்கிச் சகபரம் முடிக்குறும் அனந்தனும் போற்றுமுயர் தலைமையுற நிறுவு புகழால் தனக்கு உருவு கொண்டாங்கு தவளநிறம் மருவுந் தாய் (பி த கொத் 1-209)

இசைக் காரிகை (தனிப்-சு 161)

இசைதனில் அமுதம் வடிப்பவள் (ம சுப் து 7)
இசைப் பெண்மயில் (பச்சைநாயகி பி த 7)
இசைமகள் (கைலா நி)
இசைமடந்தை (சூடா நி)
இசைமான் (வேங்கட பு 34-2; நாம நி 56)
இசைவாணி (மயிலைப் பி த 5)
இதழ் வெளுத்த பூவரு மாது (சரசு அந் 12)
இந்த மூவுலகுஞ் செயலால் அமைத்த கலைமகள் (சரசு அந் 4)
இலகு தொண்டைக்கனி நாணுஞ் செவ்விதழ் வெண்ணிறத்தாள் (சரசு அந் 8)
இலகு வாரிசத்து உலவுங் கண்மணி (தனிப்-சு 236)
இவ்வளவு என்று அறியா உலகு யாவையும் எளிதின் நன்குசெய் நான்முகர் தாலுவுந், தவள முண்டக மீதினும் மேவிய தவள அம்பிகை (கோமதி பி த 9)
உடுக்கும் வெண்மை உடையினள் (கம்பன் பி த 1-8)
உண்மையிற் செம்பொருள் உரை ஊட்டுவிக்குங் கல்விப் பெண்மணி (செந் மு சந்)
உந்தியில் தோன்றும் பிரான் புயம் தோயும் ஒருத்தி (சரசு அந் 10)
உம்பர்வானமுதனைய படிகமலை (கந் பி த 20-7)
உயரும் வீணைக் கரத்தினள் (கம்பன் பித 1-8)
உயிர்த்துணைவி (மணி அக)

உயிர் வகுத்துப் பழநான்மறைக் கடலின் வளர் நாவள்ளத்து அமுதம் (உலகம்மை பி த 7)

உரைக் கிழத்தி (காளத் பு பதி 5)

உரைமகள் (கந் பி தி 20-9, சரசு அந் 16, நாமகள் 9-7, அ 12-6-58, வைண 2-295)

உரைமடந்தை (பிரபு 9-38)

உரையணங்கு (தே பிர 220)

உலக மாதா (கந் பிதி 20-8, சூடா நி)

உலகளித்த சதுர்முகன் நாவில் வாழும் மாகன வாணி (நாலு விலா 2)

உலகனைத்தும் படைத்தான் உயர்மாமறை ஓதும் அயன் அலகிலாப் பூத உடம்புக்கெலாம் உயிராகி நின்றே இலகறிவாகி எழில் பரமா னந்தமாய் எவர்க்குந் திலகமெனத் திகழும் செல்வம் (தனிப்-சு 140)

உவணகேதனன் மருமகள் (கந் பி தி 20-13)

எண்டிசையின் நாவலரும் மெச்சச் சிறந்தவள் (கந்த சு பித 7)

எண்ணெண்கலை தோய் கருத்தினுள் (சரசு அந் 11)

எண்ணெண்கலைமான் (சரசு அந் 13)

எண்ணெண் கலையாள் (சரசு அந் 8)

எவ்வுயிரும் படைப்பாள் (சரசு அந் 24)

எழுத்தின் கிழத்தி

எழுதா மறையும் விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர் கண்ணுங் கருத்தும் நிறைந்தாள் (சகலகலா 6)

ஏடமர் மாது (வைண கட 2-2)

ஏடலர்ந்த வெண் மலர்மகள் (மு லகரி 87)

ஏர்மருவு வெண்கமலத்து இனிதிருக்கும் இசைகொள் கலைமகள் (சிவ நாமாத்துவித கீ 3)

ஏழிசையர்கி எண்ணுய் எழுத்தாகி இலங்குகின்ற காழிசை கஞ்சத் திருக் கரத்தாள்(தனிப்-சு 167)

ஏழிசையின் இனவண்டு இரைந்து வீழுஞ்'சந்தமலி வெள்ளிமடல் ஓராயிரங் கொண்ட தமனியப் பூம் பொகுட்டுத் தவள வெண்டாமரையில் வீற்றிருந்து அரசுபுரி தையல் (கமலாலய பி த 7)

ஐந்தவி (மணி அக)

ஒண்கலைவாணி (பக்தலீலாமிர்தம் 1-3)

ஓடரி மைக்கண் குவளைபோலும் இணைக்கட் கடையின் ஊமனும் வித்தைக் குரியன் ஆக வரத்தைத் தருவாள் (பி த கொத் 2-114)

ஓதிடும் ஆகம வேத புராண விநோத சுபாஷித மாது (சிறுத்தொண் கீ 6)

ஓதுமறைப் பொத்தகமும் நாதம் மிகுத்திட்டு அமுதம் ஊறும் இசைக்குத் தரும் யாழும் மலர்க்கைக் குள் உளாள் (பி த கொத் 2-114)

கஞ்ச நாள்மலர் வளர் கலையின் செல்வி (செந் பு 10-8)

கடவுள் எகினம் வெள்ளைக் கமலமீது ஏர்பெற்ற மறை முதல கலைசொற்று இருந்தென இருந்த வள் (போரூர் சந் மு 1-9)

கடியாரும் வெண்சலசக் கலைமகள் (கூடலை பு 1-8)

கண்ணுள் (பிங்கல நி)

கணக்கறி தேவி (தோ பி தி 129)

கதிர்வெண்கலையுந் துடியிடையுங் கமலப் பதமும் சசி ஒளிர்சேர் கருணைக் கடலாந் திருவுருவாய்த் தவளக் கமலந்தனில் மிக வீற்றிருக்கும் வடிவு (பி த கொத் 1-648)

கந்தநாள்மலர் வெண்பீடம் கவின்தரு கலைமின் (புல பு 6-781)

கந்த மலர் வல்லி (நாமகளிரட்டை 15)

கம்பன் வருந்தி இரத்தலும் தன் கமல மலர்த்தாட் சிலம்பு உதவும் கருணைக் கடல் (தேவகோட்டை மு பி த 6)

கமல அயன்தனி நாயகி (சரசு அந் 8)

கமலந்தனில் இருக்கும் பூரணி (கந் பி தி 20-23)

கமலந்தனில் இருப்பாள் (சரசு அந் 19)

கமலநான் முகனுக்குத் தலைவி (பி த கொத் 2-114)

கமல மலரினில் அமரும் அமலை (அண் கருவூ 8)

கமல மாது (தி 23)

கமல வல்லி (கோ பெ பி த 80)

கமலாசனக் காரிகை (தனிப்-சு-152)

கமலாசனத்தி (கந் பி தி 20-16)

கரம் ஒன்றும் தாமரையின் மென்கொடி (ராஜராஜேசுவரி பதி)

கரியமுகில் மலர்க்குழலுங் கயல்விழியுங் கொவ்வைக் கனிவாயுங் காந்தளஞ்சேர் கரவரதாபயமும்

அரிய செபமாலையும் பொத்தகமும் முத்து வடமும் அவிர் ஒளி சேர் பளிங்குருவுமாகி அயன் மணி நாப் பிரிவற வாழ்ந்து ஏழிசை நாற்கவி பதினெண் பாடை பேசுமிலக்கணம் ஐந்தும் பெருகும் எண்ணெண் கலைகள் பரிவின் அருளிய, பூரப் பரிவரு பாமடந்தை (உபதே 7)

கருநிலை உயிரெலாம் ஈன்றருள் காரணி—கருவுறற்கு ஏதுவாகிய ஆன்மாக்களுக்கு உடம்பு கொடுப் பவள் (காஞ்சிப் 10-14)

கல்விக் கரசு (தோ பி தி 128)

கல்வித் தனித் தெய்வம் (பாரி 167)

கல்வித் தேவு (பாரதி தோத் 4-7)

கல்வி நிறைதரு வாணர் நாவிலும் கருதும் மூவர்கள் பாடுந் தமிழிலும் எல்லை எங்கினும் வளருங் கலை மகள் (அரிச்சந் 5)

கல்வி மகள் (கந் வெ மா 31)

கல்வியின் செல்வி (புகழே 2-3-168)

கலாமயில் வல்லி (கந் பி தி 20-18)

கலை ஓதும் மலர் மாது (திரிபுர ஸ்தோ 4-5)

கலைக் கடல் (கந் பி தி 20-19)

கலைக் கிள்ளை (செந் பு கட 6)

கலைக்கு இறைவி (கோ பெ பி த 11)

கலைக்கொடி (அலர்மேல் பி த 96; கண்ணமங் மா 80)

கலைகட்கு மங்கை (அ 3-1-65)

கலைச் செல்வி (நளா சத பாயி; நளா வெ துதி 5)

கலைசொல் மகள் (அருட் 8-100-10)

கலைஞானத் தோகை (கந்'பி தி 20-20)

கலைஞான வல்லி (மீனுட்சி 516)

கலைத்தலைவி (காஞ்சிப் 10-27)

கலைத்திரு மடந்தை (பரங் பு 3-20)

கலைத் தெய்வம் (பாரதி (2-63-2)

கலைத் தோகை (தி 374)

கலை தெரிந்தவர் புகழ் கலைமுதலாள் (கந் பி தி 20-22)

கலை நேயர்கள் விசேடித்த நற்புகழ் வெண்டாமரைப் பூத் திகழ் மணி (நாமகளிரட்டை 20)

கலைப் பனுவலாட்டி (சிவமலை பு 1-9)

கலைப்பாகி (திவ் 52)

கலைப்பாவை (அ 24-1-56)

கலைப் பெருமாட்டி (நாமகள் 2.9 ; 9-10)

கலைமகள்

கலைமங்கை (மீனுட்சி 528 ; கௌ 2-12 அ; கந் 1-4-12 ; சூத 1-2-3 ; சரசு அந் 19)

கலைமடந்தை (குமர 324)

கலைமயில் (விரிஞ் பு)

கலைமாது (கந்தசு 119)

கலைமான் (சரசு அந் 26 ; வேங் பு 50-13 ; காஞ்சிப் 11-4 மயூரா பு-8-24)

கலைமின் (தனி 3-584 ; புல பு 56-41)

கலைமின்னுள் (புல பு சி பாயி 10 ; சிவ பிர 87)

கலைமுடிவு (நாமகளிரட்டை 9)

கலை முதல்வி (விஸ்வ பு பாயி 16)

கலை முழுதுணர்ந்தவர் கருத்திலுறை பாவை (கந் பிதி 20-24)

கலைமேயவள் (ஆவடு கோ 168)

கலையணங்கு (பிரபு 4-54)

கலையாட்டி (பாரி 3)

கலையாள் (அருட் 8-101-2 ; சிதம் பு 3-27)

கலையானத்தி (மணி அக)

கலையின் கடல் (பள்ளி பிர 12-6)

கலையின் மகள் (பெருங்கருணை பி த 8)

கலையின் மடவல்லி (அலர்மேல் பி த 9-3)

கலையினுள் (மாக பு துதி)

கலையினிருவாக வல்லி (சிவகாமி பதி)

கலையூர்தி

கலைவல்லி (அ 20-6-54)

கலைவளர் மாது (மலை குற 3)

கலைவாணி (வான்மி பு 5-55 ; பெரிய 1952 ; தனிப் 1–167)

கலைவித்தகம் (செங்கு பு 21–68)

கலைவிதிக்குந் தவள முளரி மின் (கந் பி தி 20-26)

கவள மதகரி யுரிவைப் போர்வை மூடுங் கண்ணுத லோன்புகழ் விரிக்குங் கலைகள் யாவும் பவள விதழ்ப் பசுங்குதலை மொழியிற் காட்டும் பைந் தொடி (சேது பு வசன காவியம்)

கவிச் செல்வி (கைலா நி)

கவிதா கன்னி (செயங் வழக்)

கவி தேவி (பு பெருந்தேவி 1)

கவிதையின் உரு (ம சுப் து 7)

கள்ளிருக்கும் வெள்ளைக் கமலாதனத்தி (கலைமகளந் 41)

கள்ளேறு வெண்கமலக் காரிகை (நவமணித் திரட்டு பாயி 18)

கள்ளையுண்டு அளியினம் கானஞ்செய் வெள்ளையங் கஞ்சாதனத்தினும் செங்கஞ்சாதனக் கிழவன் நாவாதனத்தினும் காதலின் உறைந்து கவிஞர் வெள்ளையணி வெள்ளையுடை பூண்டு உடுத்து ஒளிர் மேனியாள் (கம் ச மு 9)

காதம்பரி (மணி அக)

காமேவும் இயலிசை நாடகமெனும் முத்தமிழின் கடலை நிலைகண்டு எவர்க்குங் கருத்தின் மதி பொருத்தித் தேமேவு முது வானத்து ஒளியின் ஒளி பரந்த செங்கமலத்தவன் புணரும் வெண் கமலக் கொடி (பி த கொத் 1-5)

காயத்திரி (கைலாச நி)

கான் அளாவு வெண்கமலையாம் விமலை (வீரபா 188)

கான் நாறு வெண்டாமரைப் போதின்மேல் தன்து கவின் மேனி ஒப்புமை தெரீஇக் காதலின் அமர்ந்து அருள் கொழிக்கும் மறைமுதல் அளவில் கலைஞானவல்லி (மீனுட்சி 516)

குசேசயை (வைண 2-286)

குணமா மணமிகு தாமரையதிலே உறை தமிழ் நாயகி (மார்க் சரித் கும் 2)

குறையாத கல்வியருள் பாரதி (வள்ளி வேட்கை 16)

கைம்மான் மழுவுடைய கண்ணுதலோன் தான் அளித்த வெண்டாமரையாள் (இராமப் அம்)

கோகனகத்தி (மணி அக)

கோகனகம் வாழும் மறையோன் குளிர் நாவில் உறை மங்கை (கோ பெ பித 95)

கோகனசனி (மணி அக)

சகம் ஏழும் அளித்து உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம் கண்டான் சுவை கொள் கரும்பு (சகலகலா 1)

சகல கலாவல்லி (குமர 700)

சகல கலை ஆரணி (தனிப் - சு 161)

சகல கலை மங்கை (காளத் உலா 368)

சகல வேதாகம புராண இதிகாசந் தழைத்திடத் தக்க தெய்வந் தானகி ஐந்தொழிலினுதித் தொழிற்கு உயர் சகாய நற்சக்தி யாகி அகலாது தன் கணவன் நாவிற் சுவைக்கும் இன்னமுதாகி வைகி அன்பர்க்கு ஆசு முதலிய கவிகள் பாடும் படிக்கு அருள் அளித்தவள் (பர்வதவர்த்தனி பித 8)

சதானந்தி (பச்சை நாயகி பித 7)

சதுமுகத்தோன் தன் காதலி (பித கொத் 1-648)

சதுர்மறைகளும் உதவுபவள் (சகுந் விலா)

சதுர்மறையாள் (சகுந் விலா 5)

சதுர்மறையோடு ஆகம நூல் அனைத்தினுள்ளும் தானாகி உலகம் எங்கும் தழைத்து வாழும் புதிய வெண்டாமரை மலரின் விளங்கும் மெய்யாள் (அரிச்சந் 4)

சதுர்முகன் தேவி (கதிரே க 1)

சதுர்முகன் நாவில் வாழும் மா கன வாணி (நாலு விலா 2)

சதுர்முகன் மனைவி (கந் பி தி 20-40)

சதுர்முகன் விழை வாணி (கந் கீ 1)

சர்வ கலைஞானத் தோகை (கந் பி தி 3 துதி)

சரச்சுதி (தி 337)

சரச்சுதியாள் (வைண 2-320)

சரசொதி (அறம் பி த 9-1)

சரசோதி (நாம நி 56)

சலசம் அகலாத வல்லி (சிவகாமி பதி)

சலச மடந்தை (தமிழ்ப்பா 268)

சலசவல்லி (திருமக 73)

சலசை உள் மகிழ் மருமகள் (சகுந் விலா)

சாரதா (மணி அக; பிரபு 21-12)

சார்தாம்பாள் (மணி அக)

சாரதை (மணி அக)

சாவித்திரி (கந் பி தி 20-34; கைலா நி)

சிந்தைத் தடத்தரும்பிச் செஞ்செவியிலே மலர்ந்து வந்து மணி நாவின் மணங் கமழும் வண்டா மரை மணி (கந்த நான் மணி மாலை)

2802

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலாசனத் தேவி (சரசு அந்)

சீர்மருவு கல்வி தவம் ஞானம் தீரம் சித்தி முத்தி அன்பர்களுக்கு அளிக்காநின்ற, ஏர்மருவு வெண் கமலத்தினிதிருக்கும் இசைகொள் கலை மகள் (சிவநாமாத்துவித கீ 3)

சீரார் வெண்டாமரைச் செல்வி (சந்தி வி இரட் 20)

சுடர் வெண்கமலத்தவள் (சாகுந்தலம்)

சுப்பிர கமல மூல மணிப் பொற்றவிசின் வாணி (பி த கொத் 2-114)

சுழிமுனைத் தானத்து யோகர்க்கு ஒலிக்குஞ் சுருதி மணி (தனிப்-சு 149)

செங்கமலத்தவன் புணரும் வெண்கமலக் கொடி (பி த கொத் 1-5)

செங்கமலாசனன் தேவி (அருட் 7-7-30)

செஞ் சொல் திரு (சாசனச் ப 33)

செஞ்சொல் வஞ்சி (சரசு அந் 30)

செஞ் சொலின் கிழத்தி (உப 1992)

செந்நா மடந்தை (செங் பித 7)

செழுங்கமல வெண்டிரு (வீரபா 1401)

செழுங் காவிய புத்தக பாணி (சகுந் விலா 6)

செழும் பாமகள் (தனிப்- சு 148)

செறியும் நிரைக்கால் வரிப் பூரம் செலுத்துமவள் தேவகோட்டைமு (பி த 6)

செறிவுடைய பரம் பொருளை உலகுணரத் தெளிவுறுக்கத் திருவிளங்கு படிகமணித் திருக்கோவை ஏந்தும் அன்னை (கோ பெ பித 14)

சொல் மங்கை (பித கொத் 2-95)

சொல் மாது (குமர கோட் பித)

சொல் மான் (சரசு அந் 28)

சொல்லாள் (ஆண்டி பித 3)

சொல்லிருங் கிழத்தி (உப 1970)

சொல்லின் கிழத்தி (பன்னிரு பாட்டியல்; தண்டியலங்காரம்)

சொல்லினொடு பொருளும் நன்னுவினின்று அருள் செயுந் தொல் வாணி(மரகத வல்லி பி த 8)

சொற்கலையாள் (திருவி 5- 164)

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன நிற்பவள் (குமர 708)

சொற் கொடி

சொற் செல்வி (கோ பெ பித 59)

சொற்பனுவலாட்டி (உலகம்மை பித பாயி 2; சிங் தி 5 பாயி 2)

சொன் மகள் (பிரபு 9–21)

சோதி அம்போருகத்தாள் (சரசு அந் 1)

ஞான அமலி (நாமகளிரட்டை 12)

ஞானக் கொடி (குற் குற 7)

ஞானக்கொழுந்து(தோ பி தி 128)

ஞானத்திறைவி (மணி அக)

ஞானந்தரும் இறைவி (ம சுப் து 7)
ஞான நன் மணங் கமழ் நகை நளின நாயகி (வீரபா 71)
ஞானப் பிராட்டி (குமர 358)
ஞானப் பூங்கொடி
ஞானப் பெண் (கடவூருலா 174)
ஞான முத்தமிழ் வாணி (மாம்பழ பிர 3)
ஞானமூர்த்தி (கந் பிதி 20-8; கைலாச நி; சூடா நி)
ஞானவல்லி (சிவ சந் 2)
ஞானி (பொதி நி)
தண்டாச் சிறப்பினள் (மணி அக)
தண்டாமரை தழுவும் அன்னம் (பித கொத் 2-214)
தண்டாமரையாள் (இலஞ்சி உலா காப்பு)
தவளக் கமலந்தனில் மிக வீற்றிருக்கும் வடிவு (பி த கொத் 1-648)
தவளச் சலசத்தாள் (தனி 1-100)
தவள சரோருகம் வாழ்தரு மகள் (பித கொத் 1-4)
தவளந் தரு மாது (கூடலந் 14)
தவள நளின மண்டப கனக நவரத்னமய பூஷணி (மாம்பழ பிர 3)
தவள நாள் மலரில் வைகும் ஒண்டொடி (காசிகண் வச்சிர ; செல் தி 3-4)
தவள பங்கய முதல்வி (உப 1288)
தவள மங்கை (புல பு 50-33)
தவள மணிவடமாலை புனைந்தவள் (செந் பி த 5)

தவள மலராசன முத் தமிழ் மடந்தை (துடிசைப் பு 1-13)

தவளமான் (காஞ்சிப் 10-29)

தவளமுண்டகக் கிழத்தி (காஞ்சிப் 62-9)

தவளமுண்டகமீதில் மேவிய தவள் அம்பிகை (கோமதி பி த 9)

தவளமுளரி மின் (கந் பிதி 20-26)

தவளமுளரியில் வாழ்வு புரிந்தவள் (செந் பி த 5)

தவள மெல்லிதழ்த் தாமரைக் கோயிலில் பவள மெல்லிதழ்ப் பால்நிறப் பூண்முலை துவளும் மெல்லிடைப் புத்தகந் தோற்று கையவள் (ஆடாணைப் பு 1-12)

தவளமேனிப் பாரதி (சிவராத் பு-வ 1-13)

தவள வடிவுள வாணி (செந் பி த 5)

தவள வாணி (புல பு 10-12)

தவள வெண்டாமரையில் வீற்றிருந்து அரசு புரி தையல் (கமலாலய பி த 7)

தவளாங்கி (மணி அக)

தளவமுரல் தவள மின்னுள் (புல பு 54-34)

தாமரைக் கோயில் அன்னம் (பூரணன் கட 1)

தாமரைப் பூவினிலே சுருதியைத் தனியிருந்து உரைப்பாள் (பாரதி தோத் 4)

தாமரையாட்டி (நாமகள் 1)

திருவாணி (நந்திக் 4)

திருவின் மருமகள் (அழகிய மாமுலை பி த 7)

துதியார்ந்து இலங்கு கலைமகள் எனப் பெயர் கொண்டு தூப் படிகமாலை வீணை சுருதி நூற் புத்தகங் கரம்ஏந்தி எண்கண் துளங்கும் ஒருவனை மணந்து, விதியாகமங்கள் உணர் பாவாணர் நாவினவர் மேன்மை பெறவே நடிக்கும் வெண்கமல நாயகி (பி த கொத் 1-445)

துய்ய வண்கலைவிதச் சொல் மடந்தை (வில்லி 1-43)

துய்யாள் (மணி அக)

துள்ளும் ஒரு நாதம் உமிழ் யாழுடை நரம்புதறத் துங்கமுற ஏழிஞைசை தூண்டுகர வல்லி (காஞ்சி காமாட்சி பி த 8)

தூயநிற வாணி (புல பு 54-3)

தூயாள் (மணி அக)

தூவிச்சிறை ஓதிம மாது (வடிவுடை பி த 8)

தெரியும் நான்மறை முறையறி அந்தணர் இனிய நாவில் உறைதரு சுந்தரி (தண்டிகைக் க பள் துதி)

தெருட் செல்வி (நாமகளிரட்டை 12)

தெள்ளித் தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு களிக்குங் கலாப மயில் (குமர கலா 702)

தொண்டர் செந்நாவினின்று காக்குங் கருணைக் கடல் (சகல கலா 4)

தொண்டர் தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பாலமுதம் தெளிக்கும் வண்ணம் காட்டும் வெள்ளோதிமப் பேடு (சகல கலா 7)

நயமுடன் வெண்பட்டாடை நாடிடுங் கமல நேத்ரி (அரிச் வி 5)

நல்லெழிற் பாரதி (நாமகளிரட்டை 14)

நளினம் அமர் கோமகள் (செங்கு பு 21-75)

நளிஞசனஞ் சேர் செல்வி (சகல கலா 8)

நற்கமலப் போதினில் நண்ணிய நன்னுதலாள் (திருவா 593)

நற்பா மடந்தை (திவாகரம்)

நற்போத மருள் வாணி (நாமகளிரட்டை 11)

நறைஉறு வெண்மரையாள் (வள்ளி வேட்கை 16)

நன்ருய் விரிக்கும் பல பொருட்குங் குரு உரைக்குந் திறம் இருக்குந் துறை தரிக்குங் கலே தெரிக்கும் படி அருட்கண் புரிமாது (சகுந் விலா 6)

நா அணங்கு (பூவண உலா 311)

நாக் கிழத்தி (பாசுப வெ துதி)

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள் தேடிக் கொழிக்கும் கவி வாணர் நாவும் செழுங் கருணே ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம் ஆடிக் களிக்கும் மயில் (தேவி யின் கீர்த்தனங்கள்)

நாதாந்த ரூபி (தத் சிந் 10)

நாமகள்

நாமங்கை (தே பிர 218; ஞான வி க 16; ஞான உலா 11)

நாமடந்தை (தே பிர 218)

நாமான் (கண்ணமங் மா 73 ; கைலாய மாலை 18 ; பொதி நி)

நாமிசைக் கிழத்தி (காஞ்சிப் 62-113)

நாமேவு மாது (மயில் விடு தூது 1)

நாவாள் (மணி அக)

நாவின் மங்கை (வி பு 71-25)

நாவின் மடந்தை (11 தி 28-28)

நாவினுக் கரசி (புன பு 13-47)

நான்கு தலையார்க்கு இனிய நாயகி (நாமகளிரட்டை 19)

நான்முகர் தாலுவுந் தவளமுண்டக மீதினும் மேவிய தவள வம்பிகை (கோமதி பி த 9)

நான்முகன் கிழத்தி

நான்முகன் தேவி (சரசு அந் 11)

நான்முகன் நற்றேவி (அண் கருவூ 7)

நான்முகன் நாவுறைபவள் (வள்ளி வேட்கை 16)

நான்முகனுர்க்கொரு நாயகி (நாமகளிரட்டை 8)

நிமல சுகந்த கமலம் உறைந்த கலைமாது (கந் பி தி) 26-38)

நீடித்த ஞான நிலைப் பொருள் (நாமகளிரட்டை 20)

நீர் ஆர் வெண்டாமரையாள் (க்ஷேத் பி த 9)

நூல்மடந்தை (பிங்கல நி, மணி அக)

நெடுந்தாட் கமலத்து அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக் கஞ்சத் தவிசு ஒத்து இருந்தாள் (சகல கலா 5)

பகர்தரு பனுவல்மீதும் பங்கய மலரின் மீதும் புகரிலா மறையின்மீதும் புலவர்கள் சொல்லின்மீதும் தகரிலா விரிஞ்சன் தாலும் தங்கியே அமரும் வாணி (சிக்கல் பு 3)

பகர்வேத அங்கம் முதல் அறுபத்து நாலு கலை பன்னுமொழி துன்னு கருணி (பச்சை நாயகி பி த 7)

பங்கயத் திருமாளிகைப் பல்கலை மங்கை (பாவ பு 2-68)

பங்கயத்து அலர் வீட்டினள் (சிவசயிலப் பள்)

பங்கயத்து மெல்குந் தகட்டு அகட்டு இதழ் மேயி ஞன் மறைவிரிந்து ஒளி பழுத்த செந்நா மேல் தனது வெண்மேனி செம்மேனியாக அமர் விமலை (காந்திமதி பி த 19)

பங்கயாசனத்திற் கூடும் பசும்பொற் கொடி (சகல கலா 2)

படிக நிறத்தவள் (கைலா நி)

படிகநிறத்தி (பி த கொத் 1-543)

படிகநிற வருணி (பச்சை நாயகி பி த 7)

படிக வடத்தள் (கைலா நி)

படிக வருண பதும கெற்ப பரிபூரணத்தி (பி த கொத் 1-543)

படிவமும் புகழும் செங்கைப் படிகம்போல் வெளுப் பாம் ஞானக்கொடி (குற் குற 7)

பதுமக் கலைமின் மடந்தை (வையா பள் 54)

பதுமநறுந் தொடையாள் (சரசு அந் 24)

பதுமலாஞ்சனை (மணி அக)

பதுமன் பத்தினி (சௌந்தரி பி த 8)

பதுமாலயை (மணி அக)

பல்லவபாணி (மணி அக)

பலகலைக்கும் அன்னை (நாமகளிரட்டை 7)

பலகலைகளுக்குந் தெரி கீர்வாணி (கந் கீ 1)

பலகலைகளும் உதவுபவள் (சகுந் விலா)

பலகலை தேர்ந்தவர்கள் இதய பதுமநறுந் தொடையாள் (கந் பி தி 20-39)

பலகலையுந் தரு முதல்வி (கனகராயன் பள் துதி)

பலகலையைச் சொல்வல நலமுள கலைமகள் (சகுந் விலா 5)

பலகோடி கலையும் வழுத்தக் களிகூரும் செம்பவள வாய் ஓதிமம் (தேவகோட்டை மு பி த 6)

பலவிதமா மேவுங் கலைகள் விதிப்பாள் (சரசு அந் 9)

பழைய வேதம் முற்றுணர்ந்து உயர்சிறப்பின் பனுவலாட்டி (காஞ்சிப் 52-47)

பனுவலாட்டி (சூத 1-12-3)

பனுவலின் மகள் (சகுந் விலா)

பனுவலுக்குச் சீர் அதிகந்தரும் நற்றெய்வம் (நாமகளிரட்டை 15)

பனுவற் கிழத்தி (சிங் தி 5 பாயி 3)

பனுவற் பிராட்டி (நாமகள் 16-13)

பாட்டளி பயிலும் வெள்ளைப் பதுமை (புல பு 55-42

பாடல் நங்கை (சீகாளத் 7–35)

பாதாம்புயத்திற் பணிவார்தமக்குப் பலகலேயும் வேதாந்தமுத்தியும் தந்தருள் பாரதி (சரசு அந் 7)

பாமகள் (செங்கு பு 21-75)

பாமங்கை (அறம் பி த 8-12 ; வெங் உலா 197)

பாமடந்தை

பாமறைக் கிழத்தி (க 6-4307)

பாமாது (அறம் பி த 4-6 ; சிரா கோ 440 ; மாக 24-84)

பாமுதல்வி (கந் பி தி 20–40)

பாமேவு செல்வி (சிங்கார வேலர் மாலே 1)

பாமேவு மங்கை (வெங் உலா)

பார்தந்த பங்கயன் பரிவுகொள் குயில் (கந் பி தி 20-41)

பாரதி (செந் பு 3-57 ; கந்த சு 49)

பாராயணி (மணி அக)

பால்மேனியாள் (மணி அக)

பாலன்னம் உகந்த பாவை (காஞ்சி காமாட்சி பி த 8)

பாலன்ன மேனிக் கலேமகள் (திருமக 21)

பாவனிதை (நகுலேச்சுவர தசகம் 7)

பிரஞ்ஞை (மணி அக)

பிரம கன்னிகை (மணி அக)

பிரம புத்திரி (மணி அக)

பிரமன் தேவி (உரி நி 1-19)

பிரமன் நாவீற்றிருந்த குயில் (மாம்பழ பிர ப 3)

பிரமன் முகத்துறையும் பேதை (சிவ பி துதி ப 7)

பிரமாணி (தேவி 11-8)

பிராமி (கந் பி தி 20-40 ; சூடா நி)

புகலரும் அருமறை எண்ணித் தெரித்தவள் (வஊ பி த 8)

புட்பாசனி

புண்ணிய மெய்ப் புகழுருவப் பிராட்டி (தமிழரசி குற)

புத்தகத்துள்ளுறை மாது (தோ பி தி 127)

புத்தகபாணி (மகாபாரத விலா 5)

புத்தகமும் படிகமணி குண்டிகையுந் தரித்து வெள்ளைப் பூவின்மேய வித்தகி (தேவி கட 17)

புராதனி (பொதி நி)

புலமகள் (தில் க 20)

புலமா மகள் சிந் 30)

புலவர்கள் உளம் நிறைபவள் (சகுந் விலா)

புலவர்நாப் பயிலும் பாமயில் (ரூபாவதி)

புனிதமுறு பொருள் அருள்பவள் (சகுந் விலா)

பூங்கமலாசனி (கந் பி தி 20-44)

பூமிசை அமர்ந்தருள் போதன் செவ்விய நாமிசை அமர்ந்தருள் நளின நாயகி (வீரபா 4)

பூமின் (செந் பு 3-30)

பூரணனந்தி (தத் சிந் 10)

பூரப்பரியாள் (நாம நி 56)

பூரப்பரிவரு பாமடந்தை (உபதே 8)

பூரவாகினி (கந் பி தி 20-45 ; நாமகள் 20-107)

பூவில் அமர்ந்து உறை வாழ்வு (தோ பி தி 127)

பூவின் நல்மாது (சார்த 9-4)

பூவின்மிசை நான்முகன் புணர்ந்து மகிழ்மாது (பாக பு 10-8-28)

பூவினில் உறைதரு பூவை (நாமகள் 18)

பூவினிலே வேதன் நாவினிலே நிதம் மேவிய நித்திய சர்வாணி (சகுந் விலா 6)

பூவுறை நான்முகன் நாவுறை மடந்தை (தமிழ்ப்பா 353)

பெடை வெள்ளோதிமம் (சுப்பிர பி த 7)

பெருங்கல்வி யிறைமைதரும் இறைவி (குமாரசுவாமி பி த 7)

பொன்னலர் மாதினுக்கு மருமகள் (அரிச்சந் 4)

போதங்கள் உறு வேத போதகன்றன் நாவினிற் பொருளார் தமிழ்க் கலைகள் சேர் புண்ணியம் மலர்ந்தெனப் பொலிகின்ற வெண்மலர்ப் பொகுட்டினில் இருந்து உலகெலாம் நாதன்றன் அடிமைத் திறங்கள் கண்டு உய்யும் வகை நாட்டி எல்லா உயிரினும் நாத்தலை மிளிர்ந்து அருள்புரி கலையின் மகள் (பெருங் கருணை பி த 8)

போத சொரூபி (தத் சிந் 10)

போதம் மல்கும் பாமகள் (பள்ளி பிர 7-1

போத மெய்ஞ்ஞானக் கவி மடந்தை (சித் கோ 20 துதி)

மகரந்தங் குலாய பதுமனது நாமகள் (செங்கு பு 21-75)

மகா சுவேதை (மணி அக)

மடநடைக் கலைமான் (காஞ்சிப் (11-4)

மணப்பனி நாள்மலர் உறை பூவை (சர சு அந் 8)

மணிமலர் இடம் ஆகும் மறையவன் மனையாள் (தனிப்-சு 229)

மணிமாலை புத்தகங்கொள் வாணி (நாமகளிரட்டை காப்பு)

மதிக்கொத்த மெய்யாள் (பி த கொத் 2-114)

மருக்கோல நாள்மலராள் (சரசு அந் 5)

மருமலர்க் கலைகள் சொல்லி மகத்தான மதுரவாக்குத் தருஞ் சரஸ்வதி (மகாபாரத விலா 4)

மருமலர்க் கழுநீர் புத்தகம் வரத மணிவடம் மலர்க் கரம் வயங்கும் செல்வி (செந் பு துதி 14)

மருமலர் வெண்டாமரையாள் (வான்மி பு 2-53

மருமலர் வெண்டாமரையில் உதித்த வெள்ளை மேனிக் கலைவாணி (மார்க் நாட 4)

மருமலி வெண்டாமரைத் திருமகள் (சங் கோ பு சி பாயி)

மரைமான் (கந் பி தி 20-19)

மலர்தங்கிய பிரமன் திருவுளம் இங்கித முடனே மகிழ் வாணி (மகாபாரத விலா 5)

மலர்வாணி (காஞ்சிப் (10-28 ; தணி பு 9-124)

மலர்வெண் கமலை (புல பு சி பாயி 1)

மலர்வேதன் மனைவி (செயங் வழக் துதி 3 ; ஜெயங் கொண்டார் சத)

மலரயன் நாக்கிலிருந்து இன்பங் கொண்டவள் (நித்திய கலியாணி அந்)

மலரயன் நாவு குடிகொண்டு நடனமிடும் உத்தமி (பச்சை நாயகி பி த 7)

மலரயன் மகிழ் மனையவள் (சகுந் விலா)

மறிதிரைக் கார்க்கடல் உடுத்த பார்கண்ட முதுமால் மகற்குறு தலைவி (செங் பி த 7)

மறைக்கிழவன் மனைக் கிழத்தி (சொக் பிர சி பாயி)

மறைசேர் மொழியாள் (அரிகே பு பாயி 10)

மறைசொல் கிளி (நாமகளிரட்டை 4)

மறைத்தலைவி (மணி அக)

மறைநான்கும் உரைப்பவள் (சரசு அந் 2)

மறைபயின்ற மலரோங்கிய பெண்தெய்வம் (கந் பிதி 20-48)

மறைமகள் (தி 399 ; சிவசந் 58;

மறைமுடி மேவு பாவை (கந் பி தி 20-16)

மறையாதி முதலாய கலையாள் (வள்ளி வேட்கை 16)

மறையுரை பொருள் (கந் பி தி 20-1)

மறையோன் கிழத்தி (எவ்வுளூரந் 4)

மறைவல்லாள் (விட்டி பு 1-12)

மனோன்மணி (விநோ கீ 2)

மாத்தவளத்து உரு வேய்த்த வனத் து எழில் மாற்று பனத்தி (தணி சந் மு 1-5)

மாயன் உந்தியம் பங்கேருகத்து உதித்து மண்டலமும் அண்டபகிரண்ட நவகண்டமும் மறிகடலும் ஒரு நொடியிலே மனத்திடை நினைத்துப் படைத்துக் களித்து நான்மறை தொழ வருங் கடவுள் (மயூரகிரி நாதர் பி த 7)

மா யாழைத் தரித்தவள் (விட்டி பு 1-12)

மால்திருவுந்தி தரும் பங்கயத்தின் நாவாள் (கன்னி பு 1-8)

மால் மகிழும் மருகி (வள்ளி வேட்கை 16)

மாவாணியம்மை (மகாபரத சூடாமணி)

முண்டகவாதனன் பெண் டெனும் பாரதி (சிறுத் தொண்ட கீ 6)

முத்தமிழ் வாணி (நச் விலா 92)

முத்திக்கு வித்தாகி ஞானக் கொழுந்தாகி முதிரும் வேர்ச் சுருதியாகி, முடியாத சங்கீத சாகித் தியங்களே மூலையரும் பாகி, மலர்க்கண் சித்தி தரு சத்தமுஞ் சோதிடமுமாகியே செந்தளிர்க் கைகள் கலையாய்த் தித்தித்த பேரின்ப நற்கனி பழுக்குஞ் செங் கொடி (பி த கொத் 1-315)

முத்தின் குடையுடையாள் (கோ பி தி 1-7)

முத்தின் பருமணி மாலையும் அபய வரதமும் புத்தகமும் வடப் பளிங்குந் தாங்கி முருகுயிர்க்கும்

நறுந் தவள முளரியாலயத்திருந்த முதுபிராட்டி (சீகாழி பு 1-9)

முதுமறைப் பனுவலாட்டி (சென்னி பு 13–30)

முப்பரஞ் சோதிதனை மூர்த்தி திருநாபிதன் முளரி வந்தவதரித்த முனிவனின் புற நாவில் உறை வாணி (பி த கொத் 1–103)

முளரி மாது (மணி அக)

மூதுணர்விற்குக், கமல நான்முகனுக்குத் தலைவி (பி த கொத் 2-114)

மூவுலகுந் தொழு தேவி (தோ பி தி 127)

மெய்ஞ் ஞானக் கலைமகள் (கலை மகளிரட்டை 4)

மெய்ஞ்ஞான வாணி (நாமகளிரட்டை 1)

மெய்ப்பொருள் அளித்த வாரணப் பாவை (கந் பி தி 20-50)

மென்கமலப் போதானத்தில் கொலு வீற்றிருந்த புனித மின் (வேலலங் 1-5)

மொழிக்கிழத்தி (காஞ்சிப் 10-11)

வண்டமிழின் வடகலையின் வடிவுறு மா ஞான மடுவுகுத்த பால் அருந்தி மால் மகள் நான் முகத்தும் விண்ட மலர்ப் புண்டரிக மண்ட பத்தும் இருந்து விளையாடும் ஒரு பிள்ளை வெள்ளை ஓதிமம் (வளைசைக் கலியாணி பி த 7)

வண்ணமாதிருகை (மணி அக)

வண்ண வெண்தோட்டு முள்தாள தாமரைப் பெரிய மனையிடை விரும்பி வாழ்ந்து மன்னு கலை வயிர நூபுரம் ஒலிடத் தேரும் ஆறங்க வண்

கலிங்க நுண்ணிடையின் அசை தரப் பண்ணி யல் மறைப் பணிகள் நொய்தின் இருள் நக்கி ஒளிர நோற்போர் தமக்கருள எழூம் வாணி (வடிவேலன் பி த 9)

வர வண்ணினி (மணி அக)

வரிண ரூபினி (மணி அக)

வரிக்குங் கலைக் கடல் உலாவிப் படைக்கும் ஒரு மகிணன் திருத் தால் உறீஇ மதுரம் பழுத் தொழுகு மிசை வீணை புத்தக மலர்க்குடங் கைக்குள் ஏந்தி விரிக்கும் வரிச் சிறைத் தும்பி மது உண்டு முரல் வெண்டாமரைத் தளியின் வீற்றிருக்கின்ற ஒரு வெள்ளோதிமம் (கொடி யிடை (பி த 8)

வன்ன வெண்டாமரை வாணி (புல பு 51-33)

வனசத்துப் பொகுட்டு அயன் உளத்தாமரை நச்சத் திளைத்து அவன் உரைப்பால் அருள் பெற்றுத் தரித்தவள் (அமுதா பி த 8)

வனசமலர் மீதுறையும் வாணி (பாலாம்பிகை ப அ 7)

வனச மலர் வாணி (தனி 4-5)

வனச மலரோன் மணையவள் (தனி 4-3)

வனச வீட்டின் கலை மாது (கமஃாம்பிகை பி த 3-1)

வனசாசனி (மணி அக)

வாக்காள் (நாம நி 56 ; சூடா நி)

வாக்கி (பொதி நி)

வாக்கிறைவி (அருட் 6 ப 81)

வாக்கின் செல்வி (கமலாலயச்சி 298; பாக 1846; பாக பு 8-3-32; திவாகரம்)

வாக்கின் சேயிழை (திருவி 19-2)

வாக்குடைச் செல்வி

வாக்கு தேவி (மணி அக)

வாக்கு நாயகி (அருணு பு 1-16)

வாக்கு மங்கை

வாக்குறு தேவி (கந் 6-20-22)

வாகீசுவரி (மணி அக)

வாகீசை (மணி அக)

வாசவெண் கமலம் மேவும் வாணி (ஆரூர்ப் 85-4)

வாணி

வாணியணங்கு (தி 597)

வாமை (மண் அக)

வாரி சாசனி (மணி அக)

வால் இதழ்ச் சததளத்து அம்புயத்தாள் (செங் பி த 7)

வாலிய கமலத்து அன்னை (புத் பு 1-14)

வாலியதிண் பதுமாலய நங்கை (திருவி 50-2)

வாலிய நிறப்பொற்பு அமைந்தவள் (கந்த சு பி த 7)

விஞ்சை மாது (அ 29-7-56)

விடுசுடர் நிலாக் கண்டும் ஆயிரமிதழ்ப் புதிய வெள்ளி வெண் கதவு சாத்தா விரைநறுங் கடவுட் செழுந்தாமரைக் கோயில் மேயசொற் பனுவலாட்டி (உலகம்மை பி த பாயி 2)

வித்தகப் பெண்பிள்ளை நங்கை (தோ பி தி 127)

வித்துவ சேகரர் பலர்க்குங் குலதெய்வமாகி நிகழ் வெள்ளை மான் (பழனித் திரு காப்பு 2)

வித்யா தேவி (மணி அக)

விதிநாவினில் உறைந்தவள் (சிவசயிலப் பள்)

விதியின் கிழத்தி (கைலா நி)

விமலி (மணி அக)

விமலை (மணி அக)

விரிஞ்சன் நாவின் உள்ளிருந்த ரத்தினம் (மாக துதி)

விரிதவள கமல பீடத்து வளர்கலை மகள் (கபாலீ பதி 10)

விரைகமழும் வெண்கமலப் பொருட்டரசு வீற்றிருக்கும் விரிஞ்சன் வாழ்வு (வெள்ளூர்ப்பு 1-12)

விரைநறுங் கடவுட் செழுந்தாமரைக் கோயில் மேய சொற் பனுவலாட்டி (சிங் உ பி த பாயி 2)

விற்பனர்க் கருளுங் காரணப் பூவை (கந் பி தி 20-50)

வீணா நிபுணை (மணி அக)

வீணைக் கரத்தணங்கு (பழனித் திரு 2-58)

வெண் கஞ்சத்தி ருப்பவள் (அரி பாயி 10)

வெண் கமல ஆதனம் ஆர்கலை மடந்தை (கழுகு மலைப் பி த 6)

வெண் கமலக் கொடி பி த (கொத் 1-6)

வெண் கமலத்தமர் கின்ற வித்தகியாம் விமலை (செந் மு சந்)

வெண் கமலத்தாள் (குற் சிலே வெ துதி 3)

வெண்கமலத்து இருப்பாள் (சரசு அந் 11)

வெண்கமலத் தொல்லே மனேயிற் குடிகொள்ளுந் தூவிச் சிறை ஓதிம மாது (வடிவுடை பி த 8)

வெண்கமல நாயகி (பி த கொத் (1-445; குற் உலா 1)

வெண்கமலப் பிராட்டி (மங்க பி த 75)

வெண்கமலப் பூ மேவு பாமகளாம் பூவை (கிள்ளே தூது)

வெண்கமலப் பொகுட்டுறையுங் கலேமகள் (மீனுட்சி 949)

வெண்கமல மங்கை (பி த கொத் 2-113)

வெண்கமல மலர்மீது பொற்பாயிருக்கும் மாது (பரங் மா சாத்து)

வெண்கமல மலரணங்கு

வெண்கமல வனிதை (சிவராத் பு 1-3)

வெண்கமல வீட்டுக் குடிபுக்கு இயல் மதுரந் தெள்ளிக் கொழித்துக் கலேப்பாலேத் தினமும் அருந்தி முன்பு தவஞ் செய்தார் மணிநா விளேயாடுந் தெய்வக் குயில் (மங்களே பி த 8)

வெண்கமலாசனத்தி (பி த கொத் 2-214)

வெண் கமலே (பிரபு 1-20; பொதி நி)

வெண் கலே மடந்தை (சிறுக் வி அ சாத்து; அருணு 3-76)

வெண் கலேமான் (கலாவதி)

வெண்கலை வாணி (கலாவதி)

வெண் கிளி (புல பு கட 10)

வெண் சலசமுற்ருள் (சூடா நி)

வெண்சலசி (மரகதவல்லி பி த 8)

வெண்சலசை (மணி அக)

வெண்டாமரை உறும் வித்தகி (சிவ நாமாத் கீ 6)

வெண்டாமரை ஏந்திழை (செந்திற் கோ)

வெண்டாமரைக் கண் மிளிர் வெள்ளை மேனி நல்லாள் (சீகாளத்திக் கலம் 5)

வெண்டாமரைக் கலை மடந்தை (சத்திய பித 31)

வெண்டாமரைச் செல்வி (நாமகள் 6-2)

வெண்டாமரைச் சேயிழை (வளை பித 91)

வெண்டாமரைத் தவிசில் வீற்றிருக்கும் தூ மணி (செங்கு பு 21-67)

வெண்டாமரைத் தவிசில் வீற்றிருக்கும் மெல்லியல் (ரமண தேவ மாலை துதி 2)

வெண்டாமரைத் தளியின் மேல் வீற்றிருக்கின்ற ஒரு வெள்ளோதிமம் (கொடியிடை பி த 8)

வெண்டாமரைத் திரு (கலைமகள் 3)

வெண்டாமரைத் தேவி (இலஞ் பி த 6)

வெண்டாமரை நாயகி (சரசு அந் 64)

வெண்டாமரைப் பதி மெல்லியல் (சரசு அந் 3)

வெண்டாமரைப் பனுவலாட்டி (காந் பி த 75)

வெண்டாமரைப் பிராட்டி (மங்களா பி த 8)

வெண்டாமரைப் பீடத்தில் இனிதிருக்கும் பெடை ஓதிமம் (பி த கொத் 2-7)

வெண்டாமரைப் பூத் திகழ் மணி (நாமகளிரட்டை 20)

வெண்டாமரைப் பெண் (சிவஞான சு பி த 6)

வெண்டாமரை மகள் (மணி அக)

வெண்டாமரை மயில் (சேக் பு 93)

வெண்டாமரை மலர்க் கிழத்தி (பள்ளி பிர 5-40)

வெண்டாமரை மலர்ச் சேயிழை (சரசு அந் 22)

வெண்டாமரை மேல் மாது (கயாதரம் 13)

வெண்டாமரை மேலே கனிவுடன் வீற்றிருக்கும் வண்டார் குழலி (நித்திய கலியாணி அந் காப்பு)

வெண்டாமரை யன்னம் (நாமகளிரட்டை 9)

வெண்டாமரை யாட்டி (நாமகள் 22–19)

வெண்டாமரையாள் (ராமா வெ 1-9; தாரா அ துதி)

வெண்டாமரையிருக்கும் வெள்ளோதிமப் பெடை (சிறு நூற் 72; தனி 3-699)

வெண்டாமரை யிருந்து வெண்டூசு அணிந்து இன்பங் கொண்டாள் (பாரத சார வெ துதி)

வெண்டாமரையில் அயன் றென்னுவில், கற்றோர்கள் எண் தாமரை மலரில் எந்நாளும் தண்டாமல் மேவித் திகழும் விமலை (நளா வெ துதி 5)

வெண்டாமரை யெனும் தண்மலர் வதியும் தண்ணலர் பாவை (மு அ மா துதி)

வெண்ணளினம் உறை பூ மகள் (தனிப்–சு 148)

வெண்ணிறக் கமலத்து ஆங்கண் வீற்றினிதிருந்த செல்வி (மாக 18)

வெண்ணிறக் கமலப் போதில் வீற்றிருந்தருள்வாள் (புல பு கட 4)

வெண்ணிறப் பெண் (பித் கொத் 2-7)

வெண்ணிறப் பைந்தொடி (மயின்மலைப் பித 6)

வெண் தரளப் பூண்மயில் (மாக துதி)

வெண் திரு (கரும்பேசர் பதிற் அந் 44)

வெண் தூசுடையள் (திருவாவாலவா கட 20)

வெண்தோட்டின் விரை கமழ் கமல மடமான் (அலர் மேல் பி த 95)

வெண்தோட்டு முண்டகம் மேல் விளங்குந் தாய் (பக்த மான்மியம் பொதுப் பாயி 8)

வெண்பதுமப் பாமகள் (வேம்படி வி க 1)

வெண்பாவை (கம் அ 52 ; ஆ அலங் 71)

வெண் பூமான் (நாம நி 56)

வெண்மகள் (மீனுட்சி 1051)

வெண்மரை நிறத்தவள் (கந் பி தி20-32)

வெண்மலர் மகள் (மயூரா பு 13-29 ; நச் விலா 11)

வெண்மலரின் உறையும் ஒண்டொடி (பெருங்கருணை பி த 2)

வெண்மாது (சிறுக் வி அ சாத்து)

வெண்முண்டகத் தேவி (மதுரை மீனுட்சி பதி-கோ)

வெண்மேனி மெய்ஞ்ஞானக் கலைமகள் (கலைமகளி ரட்டை 4)

வெண்மேனியள் (மரகதவல்லி பித 8)

வெண்மைக் கமல மலர்த் தளியில் விண்ணோர் பரவ வீற்றிருந்து வேதம் உணரும் திசை முகற்கு வேண்டும் துணையா விளங்குகின்ற உண்மைப் படிக நிறத்தினள் (கம்பன் பி த 1-8)

வெள்ளன்னம் (உமையம்பிகை பி த 8)

வெள்ளிதழ்ப் பூஞ் சீதாம் புயத்திலிருப்பவள் (சரசு அந் 7)

வெள்ளிய எகினம் ஊர்ந்தருள் அணங்கு (கம்பன் பி த 1-10)

வெள்ளிய தாமரை மிசைவாழ் தவளபாரதி (புல பு 52-18)

வெள்ளி வெண்கமலக் கோயில் விளங்கிய கலைகள் ஓதும் பிள்ளையோதிமம் (சங்கர வி துதி)

வெள்ளை அரும் பங்கயத்தன் அகத்துறையும் அன்னம் (கன்னி பு 1-8)

வெள்ளைக் கமலத்தாள் (மணி அக)

வெள்ளைக் கமலத்துள்ள மாது (குருகூர்ப் பள் 17)

வெள்ளைக் கமலமிசை நடிப்பவள் (ம சுப் து 7)

வெள்ளைக் கமலாசனத்தம்மை (க்ஷேத் பி த 8)

வெள்ளைக், கருணைபொழி கலைவாணி (சிவநாமாத் கீ 6)

வெள்ளைக் கலைபுனை அம்மை (குமரகோட் பி த 5)

வெள்ளைக் கலையாள் (மணி அக)

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் (மலரும் மாலையும் 2)

வெள்ளைச் செழுமலர்த்திரு (திருவி 5-156)

வெள்ளைத் தாமரைச் செல்வி (சீகாளத் 7-46)

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள் (பாரதி தோத் 4)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள்

வெள்ளைத் தூ நிறத்தாள் (தனிப்-சு 146)

வெள்ளை நிறத்தாள் (மணி அக)

வெள்ளை நிறத்தினள் (பிங்கல நி ; மணி அக)

வெள்ளை நிறத்து அஞ்சுகம் (மாக பு துதி)

வெள்ளை நிறமான் (மு திரு மேனிச் சிவப்பு, காப்பு)

வெள்ளைப் பண்மகள் (பாரதி தோத் 10-4)

வெள்ளைப் பணிகொண்டு வெண்டாமரை உறும் வித்தகி (சிவநாமாத் கீ)

வெள்ளைப் பணியாள் (மணி அக)

வெள்ளைப் பதுமை (புல பு 55-42)

வெள்ளைப் பிராட்டி (தி 319)

வெள்ளைப் பூவில்வாழ் பாமகள் (செங்கு பு 21-81)

வெள்ளைப் பூவின்மேய வித்தகி (தேவி கட 17)

வெள்ளை மயமாகிய சாத்துவித நற்குணத்தோர்தமக்

கன்றி மேவா ஞானந்தனை வளர்க்கும் வியனூர் கலைக்குந் தெய்வதமாய்த், தொள்ளையகற்றும் ஒரு தானும் சுடர் வெண்ணிறமாய் வெண்

கமலத் தொல்லை மணையிற் குடி கொள்ளும் சிறை ஓதிம மாது (வடிவுடை பி த 8)

வெள்ளை மலர்மகள் (புல பு 46-26)

வெள்ளை மாமலர் பூத்த மின் (ஆ அலங் 49)

வெள்ளை மான் (பழனித்திரு காப்பு 2)

வெள்ளை மெய்யாள் (சூடா நி ; மணி அக)

வெள்ளை மேனிக் கலைவாணி (மார்க் நாட 4)

வெள்ளை மேனியாள் (திவாகரம் ; மணி அக)

வெள்ளையங் கமலம் மேவும் வித்தகி (சேய்த் 887)

வெள்ளையிதழ்ப் பைந்தாமரை மங்கை (உபதே 13-29)

வெள்ளை யுருவாள் (நாம நி 56)

வெள்ளை வள்ளக் கமலத்தவள் (குமர 598)

வெள்ளை வாணி (புல பு பொதி 4)

வெள்ளோதிமம் (மயூரா பு 1-12 ; மீனாட்சி பி த 8)

வேதக் கொழு கொம்பு (பாரத சார வெ துதி)

வேதசத்தி (நச் விலா 176)

வேதநாயகி (செந் நொண் 6)

வேதப் பொருளுக்கு இறைவி (தோ பி தி 127)

வேத புத்தக பாணி (மாம்பழ பிர 3)

வேத முதல்வி (மணி அக)

வேத ரஞ்சக கலைமகள் (கந் பி தி 20-16)

வேதன் ஒண்ணுவில் உறைகின்ற உத்தமியாந்தேவி (செந் மு சந்)

வேதா உத்தம மனைவி (திருவாலவா கட 20)
வேதாக்ரணி (மணி அக)
வேரி யமர் வெண்கமல வித்தகி (கலைமகளந்)

———

அருஞ்சொற்பொருளகராதி

அஞ்சத் துவசம் உயர்த்தோன் - அன்னக் கொடியை உடைய பிரமன்
அயன்பாரி - பிரமாவின் மனைவி
அளியினம் - வண்டுக் கூட்டம்
ஆரணப் பாவை - வேதத் தலைவி
உந்தியில் தோன்றும் பிரான் - திருமாலின் கொப்பூழில் தோன்றிய பிரமன்
உலகனைத்தும் படைத்தான் - நான்முகன்
உவண கேதனன் - கருடக்கொடியை உடைய திருமால்
எண் (தாமரை) - மதிக்கத்தக்க (தாமரை)
எண்ணெண்கலை - அறுபத்துநான்கு கலைகள்
ஓதிமம் - அன்னம்; அன்னம்போன்ற கலைமகள்
கண்ணுதலோன் - சிவபிரான்
கமல நேத்ரி - தாமரை போன்ற கண்களை உடையவள்
கவின் மேனி - அழகிய உடல்
கலைநேயர்கள் - கலையன்பர்கள்; கலைப்பித்தர்கள்
கான் அளாவு வெண்கமலை - மணம் பொருந்திய வெண்தாமரையில் வீற்றிருப்பவள்
கோகனகம் - தாமரை
சகம் ஏழும் அளித்து உண்டான் - ஏழுலகங்களையும் காத்து, அவற்றை உண்டவனாகிய திருமால்
சலசம் - தாமரை
சலசை - திருமகள்
சீதாம்புயம் - குளிர்ந்த தாமரை
சுபாஷித மாது - நல்ல மொழிகளைப் பேசும் மாது
(கலை) சொற்று - சொல்லி, கூறி
தவளசரோருகம் - வெண்தாமரை
தவள நிறம் - வெண்ணிறம்
தவளமுளரி - வெண் தாமரை
தவளமூரல் - முல்லைபோன்ற பற்கள்; முல்லைச் சிரிப்பு

தளி - கோயில், ஆலயம்
தாலு - நாக்கு
நளினம் - தாமரை
நளிஞசனம் - தாமரையாகிய ஆசனம், இருக்கை
நறுந்தவள முளரி - மணம் மிக்க வெண்தாமரை
நறை உறு வெண்மரை - மணம் பொருந்திய வெண்தாமரை
நான்கு தலையார் - நான் முகன்
பங்கேருகம் – தாமரை
படிகநிற வருணி – பளிங்குபோன்ற வெண்ணிறத்தவள்
பனுவல் - நூல் ; வேதம்
பாட்டளி - பாட்டுப்பாடும் வண்டு
புண்டரிக மண்டபம் - தரமரைக் கோயில்
புத்தகபாணி - கையில் புத்தகத்தை வைத்திருப்பவள்
பூரப்பரி - பூரமாகிய வாகனம்
பொன்னலர்மாது - திருமகள்; பொற்றமரை மலரில் இருப்பவள்
பெடையோதிம்ம் - பெண் அன்னம் (போன்ற கலைமகள்)
போதம் - அறிவு, ஞானம்
போதன் - நான்முகன் ; வேதன்
மறை - வேதம்
வாலிய - வெண்மையான
வித்துவசேகரர் - கல்வியறிவு மிக்கவர்கள் ; பண்டிதர்கள் ; புலவர்கள்
விரிஞ்சன் - பிரமன்
வெண்ணளினம் - வெண்தாமரை
வெண்பதுமம் - வெண்தாமரை
வெண்முண்டகம் - வெண்தாமரை
வெள்ளிய எகினம் -வெள்ளை நிறத்து அன்னம்
வெள்ளைப் பணி - வெள்ளைநிற ஆடை
வேதா - வேதத் தலைவனான நான்முகன்

இந்நூலாசிரியரின் பிற நூல்கள்

அடுக்கு மொழி அகராதி	விலை ரூ. 3—00
எதிர்ப்பத அகராதி	3—00
ஒலிக்குறிப்பகராதி	1—75
திருமகள் அருட்செல்வம்	2—25

அச்சில் உள்ளவை

விநாயகர் அருட் செல்வம்

ஐம்பொறி அகராதி

கிடைக்குமிடங்கள் :

1. பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1.

2. C. P. S. புக் ஷாப்
மேலக்கோபுர வீதி, சிதம்பரம்.